181234

திருப்போரூர் ஸ்ரீ முருகக்கடவுளின்
தியான மஞ்சரி

O26:2112.3R
N26
181234

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

—:—

திருப்போரூர் ஸ்ரீ முருகக்கடவுளின்

# தியானமஞ்சரி.

இஃது

சென்னை இராயப்பேட்டை

ஸ்ரீ விநாயக மஹோற்சவம்

ஸ்ரீ கபாலீஸ்வரர் தர்ம தண்ணீர்ப் பந்தல்

ஸ்ரீ சிவப்ராகாச பக்த பஜனை

திண்டிவனம் தாலுக்கா, கொள்ளாறு கிராமம்

ஸ்ரீ சிவப்ராகாச சித்தி விநாயக தேவஸ்தானம், பாடசாலை

மேல்பாக்கம் கிராமம்

ஸ்ரீமத் - திருவள்ளுவர் பாடசாலை

செய்குப்பி கிராமம் ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ராகாச பாடசாலை

ஆகிய இவைகளின் ஸ்தாபகரும்

ஷை இராயப்பேட்டை சோதிடாருட கணிதநூற்புலவர்

ம-ா-ா-ஸ்ரீ மு. தங்கவேற் பிள்ளை யவர்கள்

மைத்துனருமாகிய

கோ. பூங்காவனம் பிள்ளை யவர்கள்

கேட்டுக்கொண்டவண்ணம்

சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்

இயற்றப்பட்டு

சென்னை சேத்துப்பேடு

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

—0—

தமிழ் அக்ஷய ளு சித்திரை மீ 3உ

குருவாரம் கிருத்திகையன்று காலை ஷை சுவாமி சன்னிதானத்தில்

...ப்பிரகாச பக்தஜன சபையாரால் பாடி

...னியோகஞ்செய்யப்பட்டது.

...926 ளு ஏப்ரல் மீ 15உ


926:38:211A TR
1926.
181234

1261
8274
294'55

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.



திருப்போரூர் ஸ்ரீ முருகக்கடவுளின்

# தியானமஞ்சரி.

## விநாயகர் வணக்கம்.

—— * ——

வெண்செந்துறை கலிநிலைத்துறை.

இகழும்ப ரிம்பர் தினைசேவை செய்யுந் திருப்போரு
ரகழும்ப ரிம்ப ரதீதப் பழம்பொரு ளருமுருக
னுகழும்ப ரிம்ப ருளங்கமழ் மஞ்சரி யுரைப்பதற்கு
பகழும்ப ரிம்பர் வேப்படி விநாயகனை வேண்டுதுமால்.

## பஞ்சரத்தினம்.

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம். பண் - நட்டராகம்.

ஓதரிய மறைசுருதி தேவரயன் மாலிந்திர
ருயர்தவஞ்செய் தேத்துமுருகா
வுள்ளமெனுங் கோயிலைவிட் டகலா வாரூராத்
துகர்தவறு முகங்கொள்முருகா

சாதினைகட் பலவுளதிற் சதுர்விதமுங் நான்குகலைத்
தனைபன்னிரு கரங்கொள்முருகா
சருவசாட் சியுஞ்சொரூப வருபரூபா ரூபந்
தனுடஞ்விளை யாடுமுருகா
பூதாதிகட் காமக் குரோதாதி சத்துருவிற்
பொருந்தாது தனித்வமுருகா
புனிதசிவ காமிசுந்தரி நாராயணி தந்தப்
புனிதப்பா லுண்டமுருகா
மாதவத் தாலன்றி யுன துருவ மகிமைநிலை
வயப்படா தொளிருமுருகா
வரந்தருக வரும்போரூர் பரமசிவ குருசின்மய
வள்ளல் முருகக்கடவுளே. (க)

திருவிளங்கு மானந்த ஞானமுகங் காட்டிகடஞ்
செய்கின்ற பரமமுருகா
சிக்ஷைதவரும் பந்தமெனுங் கக்ஷைவழி கொர்ந்தழியா
திகழ்நிலைதந் தாளுமுருகா
உருவிளங்கும் பலகோடி நாமரூப தேவர்கட்பேர்
ருற்பவ மிலாதமுருகா
வுள்ளபடி சூர்யசந் திராக்னி யெனுமுக்கணு
ளோங்குமோங் காரமுருகா
குருவிளங்கு முருகொண்டு வேதரகஸ்ய மூலமெய்க்
குணங்கண்டுபதேசமுருகா
கோணுத மனத்தராய்க் கும்பிடுவோ லுண்மையரின்
குறைதீர்த்திங் காளுமுருகா
மருவிளங்கு மஞ்ஞானச் செயலோங்கி டாதவருண்
மணக்கின்ற தெய்வமுருகா
வரந்தருக வரும்போரூர் பரமசிவ குருசின்மய
வள்ளல் முருகக்கடவுளே. (உ)

இன்பமுந் துன்பமிவை யிரண்டும் வேண்டாதவரு
ளேகாந்த மானமுருகா
யெப்பொருளா கினுமவையுள் மெய்ப்பொருட்காண் பவர்
ளினிதோங்கி நின்றமுருகா [கருத்து
கன்மதன் மக்களை கட்டுரைகட் பேசிடார்க்
காணவரு ஞானமுருகா

181234

கந்தமே ! கந்தனெனக் கமழும்பரி மளவாசங்
கலந்தசிவ ஸ்கந்தமுருகா !
பன்மறைகட் பலகோடி கற்கினும் பேசினும்
பகரரிய வுருகொள்முருகா
பத்தியெனு நகைபூண்டு முத்தியெனும் வீடடைவர்
பார்த்துமகிழ்ந் தேத்துமுருகா
மன்னுமெய் யாளருள மகலாத மூர்த்தியென
வாழ்கின்ற வேதமுருகா
வரந்தருக வரும்போரூர் பரமசிவ குருசின்மய
வள்ளல் முருகக்கடவுளே. (௫)

தரணியெலாம் பரவிதொழ நலமருளி காக்கின்ற
சண்முகா னந்தமுருகா
சமஸ்ததிரு விளையாடற் செய்துஞ் செய்யாதவர்போ
டழைத்திலகு மோனமுருகா
விரதமது கடைபிடித் தொழுகுமன் பர்களுளத்தில்
விளங்கிநட மாடுமுருகா
வித்திலா விளைவாகி வேதாந்த சித்தாந்த
மெய்யுணர்வோர்க் காணுமுருகா
சரணார விந்தமதை நம்பினோர்க் குறைதீர்க்குஞ்
சமரச் சுபாவமுருகா
சகலாக மத்தினுஞ் சைவமெய் யெனக்காட்ட
சம்பந்த ஞானமுருகா
மரணமெனுஞ் சகடைநாள் வந்தொழிமுன் பந்தமொழி
வகையருளி யாளுமுருகா
வரந்தருக வரும்போரூர் பரமசிவ குருசின்மய
வள்ளல் முருகக்கடவுளே. (௬)

நி[illegible]வசய னினதுபுகழ் நினதுருவ னினதுமயம்
நீடிக்க வருளுமுருகா
நித்தியாப ரோட்சநிலை நிரதிசயா னந்தநெறி
நிற்ககண் பாருமுருகா
தினகரனே ! தினையளவு தானம்பனை யளவோங்க
சித்திதருந் திவ்யமுருகா
சிவப்பிரகாசன் றமிழ்க்கொண் டெழில் தியானமஞ்சரியை
செப்பிதொழும் பூங்காவனம்

தன துபிணி சஞ்சல மெலாந்தீர்த்து முறைகேட்டு
தயவுவைத் தாளுமுருகா
தமியேன்செய் திருப்பணி யெலாநிலைத் திடவேண்டி
சரணம தடைந்தேன்முருகா
மன திறுதி யுளவெலாந் தெரிந்த சுப்ரமண்யனே!
மாசிலா மணியேமுருகா
வாந்தருக வரும்போநூர் பரமசிவ குருசின்மய
வள்ளல் மூருகக்கடவுளே. (ரு)

—— ):( ——

## ஆனந்தக்களிப்பு.

சிவசிவா னந்த மானந்தம் – பேரூர்
சிவமுருக பிரான் சேவையானந்தம் (சிவ)

(க) தவத்தள வேவந்து கூடும் - நம்
சண்முக வள்ளலைச் சந்ததம் பாடும்
நவமிகு மன்பரை நாடும் - துன்பம்
நாடாம லண்ணலின் பார்வையா லோடும்; (சிவ)

(உ) தேவாதி தேவர்க டோத்திரன் - கலை
சிறந்து விளங்கிடும் பன்னிரு நேத்திரன்
ஆவலா யீசன்முன் சாத்திரம் • தன்னை
யன்று வுரைத்த வதிதன் மா சூத்திரன்; (சிவ)

(ங) காரண கார்யங் கடந்து – ஞானக்
கண்ணொளி பெற்று கதிசே ரடைந்து
பாரதின் வாழ்வி விடைந்து - சதா
பக்தியினாலே பணிமெய்த் தொடர்ந்து; (சிவ)

(௪) எங்குஞ் சிவப்பிர காசம் – இவை
யில்லாம லேதுண் டையோ அவலேசம்
துங்கமெய்த் தொண்டர்க ணேசம் - நண்மைத்
துலங்கிடு மென்றுச் சொன்னாலே ஞயாசம்; (சிவ)

(ரு) இச்சையற் றவர்க்குள் விளங்கும் – ஆறு
எழுத்தை மறவா தேத்தில்வினைக் கலங்கும்
சச்சிதா னந்தமே தங்கும் - நிலைத்
தானறிந் தாலே யின்பசுகம் பொங்கும்; (சிவ)

(௬) ஐவர்கள் வாழ்மனக் காடு - போரு
ரானதெக் குண்டு வேரோறிடு காடு
மெய்யழி யாப்படி தேடு - ஞான
வித்தை விளைவினுக் கேதுண்டு யீடு; (சிவ)

(௭) புள்ளி மயிலெனும் மாயம் - வந்துப்
பூர்த்து மணக்குதங் கென்றே வாதாயம்
வள்ளிதெய்வ யானை சகாயம் - வந்தால்
மகிழ்சத்தி யிருவருஞ் சொல்லா ருபாயம்; (சிவ]

(௮) அருளோங்கும் படியென்றுந் துதிப்பாய் - நாளை
அந்தகன் வந்தாலென் செய்வாய் குதிப்பாய்
பொருளோங்கும் வழியை மதிப்பாய் - ஐயோ
பூர்த்து வுதிர்ந்திடுமெப்போ கதிப்பாய்; [சிவ)

[௯] சரவண பவனென ஆறு - எழுத்தைத்
தான்றினம போற்றி வணங்கினற் பேறு
வரமதுவுந் தென்றுங் கூறு - முண்மை
வாய்களந் தந்தான் சண்முகன் திருநீறு; [சிவ]

(௰/ சோதியுட் சோதியுட் சோதி - ஞானந்
துலங்கினோ ரல்லவோ வென்றும் பிரக்யாதி
நீதிலா மெய்ப்பொரு ளோதி - சதாச்
சிந்தைச் செய்தார்கள் கண்டார் சைவநீதி சிவ

(௰௧) நவகண நவக்கிரக மாகும் - இதை
நாடோறும் போற்றிடி லூழ்வினைப் போகும்
அவமனத் தோர்க்கு வேறாகும் - முருக
அண்ண லுருவை யெண்ணில் மாய்கையேகும்;

(௰௨) தங்கவே லேந்திடுங் கையன் - அருள்
தங்கவே சிந்தைசெய்வோர்க் கென்றும் மெய்யன்
துங்கமெய்ஞ் ஞானியோர்த் துய்யன் - சதா
துதிப்பவர் வேண்டு மற்புத முருகையன்; (சிவ)

(௰௩) ஊத்தைதன்று குன்றோ கொண்டாட்டம் - பலபெய
ருரைத்து மகிழ்ந்தாய்க் கேட்டாலோ வாய்கீட்டம்
சூத்திரக் கயிறற்றால் திண்டாட்டம் - நாளை
சொல்லா தொழிவதற் கேனிப்போராட்டம் (சிவ)

(யச) நன்மைக்கு வுண்டு நிர்ப்பந்தம் - இதை
நாளுங்கைக் கொண்டு முடிப்பதே அந்தம்
தின்மைக்கு யென்றென்றஞ் சொந்தம் - காட்டி
தேகமலையு ழைதையையோ யென்பந்தம்; (சிவ)

(யரு) முருகையா முருகையா வென்று - உன்
முறையெல்லாஞ் சொல்லி முளரிதாணின்று
வருகின்ற வினையெலாம் வென்று - சன்மம்
வந்ததுபோது மினிவேண்டா மென்று; (சிவ)

(யசு) வெண்ணீ றணிவார்நற் சிலர் - அன்பே
விளங்குஞ் சிவமென்றுணர்த் திருமலர்
கண்மணி பூண்டோர்மேற் காலர் - வந்தாற்
கண்கெட்டு வீழ்வாரந்தோ காலகோலர்; (சிவ)

(யஎ) ஆக்கை யழியுமுன் தாண்டு - ஞான
வற்புதக் கந்த னருடனை வேண்டு
பாக்கியம் வேறென்ன வேண்டும் - சைவப்
பற்றொன்றே யிடை வழியதைத்தூண்டும்; (சிவ)

(யஅ) பஞ்சவர்ணக் கிளிப் போச்சு - கூண்டை
பாடைமேற் றாக்கிக் கொண்டாமடின் மூச்சு
எஞ்சின துண்டோ வீண் பேச்சு - பேசி
இழவுகொண் டாடினை யென்முடிவாச்சு; (சிவ)

(யகூ) ஆசாபாச மிந்தலோகம் - இதி
லழுந்திக்கிடந்து மடிந்திடுந்தேகம்
பேசா மௌனசிவ யோகம் - தன்னைப்
பின்பற்றினோர்க்குண்டு சர்வாதிபோகம்; (சிவ)

(உய) வினைப்போக்க வேண்டு மருந்து - திரு
வெண்ணீறே சைவர்க்கு ஞான விருந்து
தனைப்பார்க்கி லுண்மைத் திருந்தும் - சன்ம
சாகரந் தாண்டு நிலையிற் பொருந்து; (சிவ)

(உக) மெய்யருண் மெய்யது கூடும் - அது
வேறாகி லன்னோ ருறவதை சாடும்
வெய்ய நெறிவிட்டு நாடும் - ஞான
விளக்கெனும் வழிகொண்டு பார்ப்பவர்தேடும் (சி)

(உஉ) சித்தாந்த ஞானமே ஞானம் - உண்மைத்
தெரிந்து வன்பர்செய்வா ரென்றென்றுந் தியானம்
சித்தஞ் சிவமாகு மோனம் - வந்து
சேர்ந்தா லுண்டுண்டு சகல சுஞ்ஞானம்; (சிவ)

(உங) ஏகாந்த நிலையதே நித்தியம் - கொண்டு
யீச னுபாசனைப் பத்தியமே சத்தியம்
யோகந்த நீத்தலே பத்தியம் - இதன்
மூலறதெரியா துளருவர் வீண் வைத்தியம்; (சிவ)

(உச) ஊனற்ற தேகமெங்குண்டு - இத
னுளவறி யாப்படி கண்டதைப்போல் விண்டு
வானற்ற மழையெங்க லுண்டு - வளம்
வருவதெல்லாமதன் வல்லமைக் கொண்டு; (சிவ)

(உரு) குருலிங்க சங்கம பத்தி - தன்னுட்
குலவி வணங்கிட வருஞான முத்தி
வரும்வழி யானதை நத்தி - ஞான்றும்
வாழ்த்தியேத் திடின்வாய்த் திடுமஷ்டசித்தி (சிவ)

(உசா) விசுவாச மன்பிலா நேசம் - வந்து
விளையுமே பொல்லாச் செயலது மோசம்
பசுபோல் புலியுள்ள தேசம் - அதன்
பாலெல்லாம் நஞ்சாகு முண்மைப்ரகாசம்; [சிவ]

[உஎ] தீங்கானச் செயலதை யோட்டு - என்றுஞ்
சிவப்பிர காசனின் செந்தமிழ்ப் பாட்டு
பூங்காவனம் முறைக் கேட்டு - நன்மைப்
பொருந்த முருகையனே யின்ப நாட்டு [சிவ]

——]§[——

தீபதைகள் - இங்கிலீஷ் நோட்.

——※——

வாரும் வாரும் முருகையனே வரந்தரும் பன்னிருகையனே
பாரும் பாரும் முருகையனே பணிந்தேனருட்செய்வாய் மெய்யனே

[க] ஆருந்துணையிங் கில்லையே அடியேன் படும்பெருந்தொல்லையே
சீருஞ் செம்மையும் வல்லையே சிவமே வுன்மனங் கல்லையே

[உ] கற்றவர்கட்சொலுங் காரணா கந்தனே கடம்பா வாரணா
பற்றொழிந்தவ ருதாரணா பாலசுப்ரமண்யப் பூரணா ;வாரும்

18234
026:38.212TR.
N36

[௩.] சிவன்விழியில் வந்த சோதியே சென்மமில்லாத வனாதியே
தவத்தாலுண்டு மெய்ந்நீதியே சண்முகா சம்பந்தா ஆதியே [வாரும்]

(௪) கும்பமுனி சீர்ப் போற்றவே கும்பிட்டன்பர் மலர்த் தூற்றவே
நம்பினவர்க்குறை மாற்றவே நாளும் பஜித்துசீர் சாற்றவே

(௫) ஆறுதாரனே அறுமுகா அன்பர்கட் கென்றுந் தருஞ்சுகா!
மாறு வினையினுட் புகா வண்ணந்தயை செயக்கை விடத்தகா

(௬) அருணகிரிக் கதாகூலனே அழகனே மாவடிவேலனே
கருணாகரனே மெய்மூலனே கனவள்ளி தெய்வானை லோலனே

(௭) சிற்பரானந்தமே வந்தமே சிந்திப்பவர்க்கேது பந்தமே
தற்பரி வம்மைசொல் கந்தமே தாருஞ் சரணார விந்தமே; (வாரும்)

(௮) மாங்கனி யுண்டவன் றம்பியே மகிழ் சிவப்பிரகாச னம்பியே
பூங்காவனம் நாளு நம்பியே போற்றிசெல்தேனரு ளோம்பியே

---

## போற்றித் தேவாரம்.

அஞ்சலென் றடியார்க் கின்ப மளித்திடு முருக வேளே
செஞ்சரண் தன்னை ஞான்றுஞ் சேவைசெய் பூங்காவனம்
மஞ்சரி மலரைச் சூடி வாழ்த்தியே வணங்க நன்மைத்
தஞ்சமா யீந்தாட் போரூர் சண்முகா திருத்தாட் போற்றி.

—§—

Ω76:38-2106
N06

## வாழி விருத்தம்.

---

ஐங்கர விநாயகனு மரனுமையும் முருகபிரா னம்மையார்க
ளகலிழு நவகணமு மவனியெலாம் புகழ்பாவி யருளுநீட
துங்கநவ சமயநருஞ் நால்வர்களுந் திருத்தொண்டத் தொகையுளாருந்
தூசனனு உம்பவமிடி யைப்பொடிமாக்குந் திருநீறுந் தூய்மைமன்னுஞ்
சங்கரனுர்த் திருவிழியாம் ருத்ராக்க கண்டிகையுஞ் சருவ ஞானந்
தழைமகிமை நிறைசைவ சமய மயில்வேலுமன்பு சார்ந்த வன்பர்
தங்குபுகழ் சமரபுரி தனைவலம்வந் தேத்தினருந் தன்மை சீர்சால்
தகைமையுடன் பூங்காவனம் சொலுந் துதியுங்கவிஞர்பக்தர் தாணிவாழி

—),—

திருப்போரூர் ஸ்ரீ முருகக்கடவுளின்
தியானமஞ்சரி முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

18234

9B
3.43